OS 72/2023

நாள் : 03.09.2024

வா.சா. :1

பெயர் : கௌதம்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்தம் என்றால் சரி. கிரய ஒபந்தத்தை பூர்த்தி செய்ய கால அவகாசம் 6 மாதம் என்று கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 6 மாதம் தவணைக்காலம் முடிவதற்குள் கிரய ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய தயாராக இருப்பதாக பிரதிவாதிக்கு எழுத்துபூர்வமாக அறிவிப்பு எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதியிடமும் அவரது சகோதரர் பாஸ்கரிடமும் நேரடியாக தெரிவித்தேன். அவர்கள் சர்வே செய்த பின் கிரயத்தை பூர்த்தி செய்து தருவதாக சொன்னார்கள். எந்த தேதி மாதம், வருடத்தில் தெரிவித்தேன் என்றால் 09.12.2020 ல் தெரிவித்தேன். மேற்படி விவரத்தை வழக்குரையிலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ முதல் விசாரணையிலோ சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன். அதுபோல் வழக்குரையில் சொல்லியிருக்காவிட்டால் நான் தற்போது சொல்லும் சங்கதி பொய் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ 4** ஆவணத்தில் பாரா 3 ல் பல முறை நேரிலும் ஆட்கள் மூலமாகவும் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அப்படி கேட்ட தேதி வருடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. ஆட்கள் மூலம் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அது யார் மூலம் என்று குறிப்பிட்டு கூற வில்லை என்றால் சரி. கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட 6 மாத கால அவகாசத்திற்குள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரி. ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் சர்வே செய்துவிட்டு கிரய பத்திரம் பதிவு செய்து கொடுப்பதாக சொன்னார். ஆனால் அதுபோல் இதுவரை சர்வே செய்யவில்லை. இந்த விஷயத்தை பிரதிவாதி எந்த தேதியில் எந்த மாதத்தில்எந்த வருடத்தில் சொன்னார் என்றால் 2020 வது வருடம் தேதி மற்றும் மாதம் நினைவு இல்லை. 6 மாத காலம் முடிவதற்கு சுமார் 2

வாரத்திற்கு முன்பு. 6 மாதம் கடந்து 7 வது மாதத்திலாவது அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 6 மாத கால முடிவதற்குள் நான் கிரயத்தை பூர்த்தி செய்து கொள்ள தயார் நிலையில் இருந்ததற்கு ஏதாவது ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் தயாராகதான் இருந்தேன். எனது தயார் நிலையை காண்பிப்பதற்கு வழக்கு தாக்கல் செய்தபோது மீதமுள்ள கிரய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏற்றதை ஆற்றுக பரிகாரம் பெற கால அவகாசத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவேண்டுமென்று தெரியுமா என்றால் தெரியும். அப்படி கால அவகாசத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று தெரியுமா என்றால் தெரியும். நான் கால தாமதமாக வழக்கு தாக்கல் செய்ததற்கும் காலதாமதமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கும் என்ன காரணம் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பிஸ்னஸ் செய்து வருகிறேன். நான் பால்பொருட்கள் உற்பத்திசெய்யும் பிஸினஸ் செய்து வருகிறேன். எனது பிஸ்னஸ் ஏர் உழவன் என்ற பெயரில் நடத்தி வருகிறேன். அது என்னுடைய சொந்த கம்பெனி. பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதிலுரையை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அவர் நான் கிரய ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய தயாராக இல்லை என்று சொல்லியிருக்கிறார். பிரதிவாதி பதிலுரையில் கிரய ஒப்பந்தக்கால அவகாசத்திற்குள் நான் கிரயத்தை பூர்த்தி செய்து கொள்ள தயாராக இல்லாததால் நான் கொடுத்த முன்பணத்தை திருப்பி தயாராகஇருப்பதாகசொல்லியுள்ள நிலையில் நான் அதற்கு ரிப்ளை ஸ்டேட்மன்ட் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கிரய ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய தயாராக இருப்பதாக சொல்லியிருக்கிறனே். நான் தயார் நிலையில் இருந்ததை நிருபிக்காத நிலையில் கால அவகாசத்திற்குள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாததாலும் வழக்கு தாக்கல் செய்யாததாலும் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. Time is the essiential of the contract என்பதால் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குரையில்

மாற்று பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் இல்லை. கிரயத்தை பதிவு செய்து கொள்ள தயாராகஇருப்பதாக சொல்லியுள்ளேன். வழக்குரையில் கோரியுள்ள மாற்று பரிகாரம் பற்றி எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் தெரியாது. கிரய ஒப்பந்தத்தை தகுந்த கால அவகாசத்திற்குள் பூர்த்தி செய்யாவிட்டால் அட்வான்ஸ் தொகையை திருப்பி தரவேண்டும் என்ற வாசகம் இல்லை என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அந்த கிரய முன்தொகைக்கு வட்டியுடன் திருப்பி தரவேண்டுமென்றோ இத்தனை சதவீதம் வட்டியுடன் திருப்பி தர வேண்டுமென்ற வாசகம் எதுவும் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. அப்படி இருக்கும்பட்சத்தில் மாற்றுபரிகாரத்தில் 12 சதவித வட்டியுடன் அட்வான்ஸ் தொகையை திருப்பிதர கோரியிருப்பது தவறு என்றால் சரியல்ல. வாசகம் இல்லை என்றால் தவறு. முன்பணத்தை திரும்ப கேட்பதற்கு ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் உள்ளது என்றால் சரியா என்றால் நான் முன்தொகையை திருப்பி கேட்கவில்லை. காலம் கடந்து முன்தொகையை நான் கேட்க முடியாது என்றாலும் மாற்று பரிகாரம் காலாவதி தோஷத்தால் பாதிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. மாற்று பரிகாரமோ அதற்குண்டான வட்டி தொகையோ எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னால் கிரய ஒப்பந்தத்தை பூர்த்திசெய்ய கூடிய பணவசதி இல்லை என்றாலும் அதனால் பிரதிவாதி கிரய முன்தொகையை திருப்பி பெற்றுக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார் என்றாலும் சரியல்ல. அவர் அதுபோல் சொல்லவில்லை. கிரய ஒப்பந்தத்தேதியிலிருந்து இன்று வரை எனது பேங்க் ஸ்டேட்மன்ட் போட்டால் என்னிடம் கிரயத்தை பூர்ததி செய்து கொள்ள போதுமான பணம் இருந்ததா என்று தெரிந்து கொள்ளலாம் என்றால் சரி. மீதமுள்ள கிரய தொகை அதிகமான கிரய தொகை என்றாலும் அதை என்னால் கொடுக்கமுடியவில்லை என்றாலும் தற்போது சொத்தின் மதிப்பு அதிகரித்து விட்டதால் பொய் கட்சியாடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவிற்கு தகுந்த வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. நான் செலுத்திலயுள்ள நீதிமன்றக்கட்டணம் தவறு என்றால் சரியல்ல. வழக்குரையில் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரமோ மாற்று பரிகாரமோ எனக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.